# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Accredited with 'A+' Grade by NAAC in the Third Circle)**

திருச்சிராப்பள்ளி–620 024.

தொலைபேசி:0431- 2407016 / 2407060

தொலை நகலி: **0431-2407444**

முனைவர்.சு.சீனிவாச ராகவன்,எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்ஸி.,பி.எச்.டி., மின்னஞ்சல்: **coe@bdu.ac.in**

தேர்வு நெறியாளர் (பொ) இணையதளம்: **www.bdu.ac.in**


---

ந.க.எண்: தே.பி./பட்டயம்/சான்றிதழ்/மே-ஜுன் 2021/செய்முறைத் தேர்வுகள் நாள்: 19.03.2021

பெறுநர்

முதல்வர்,
பல்கலைக்கழக இணைவு பெற்று பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகள்.

மற்றும்

**BDU-BDC** வாயிலாக **Off-Campus** முறையில் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள்.

அய்யா / அம்மையீர்,

பொருள்: மே/ஜுன் 2021-ல் நடைபெற இருக்கும் பல்கலைக்கழக பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்குரிய செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணை – தொடர்பாக.

-------

நடைபெறவிருக்கும் மே/ஜுன் 2021-ன் பல்கலைக்கழக பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளை 13.05.2021 – வியாழக்கிழமைக்குள் நடத்தி முடித்து, மாணாக்கர்களுடைய அக மற்றும் புற மதிப்பீட்டு மதிப்பெண்களை அகத் தேர்வாளர், புறத் தேர்வாளர், துறைத்தலைவர், முதல்வர் ஆகியோரது கையொப்பத்துடன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், ஏப்ரல் 2020-ல் சேர்க்கை பெற்று மே/ஜுன் 2021-ல் முதல் வருட/முதல் பருவ தேர்வை எழுத இருக்கும் மாணாக்கர்களது பெயரை **10th, 12th** –ல் உள்ளது போல் தயார் செய்து, பிறந்த தேதி, விலாசம், தொலைபேசி எண் போன்ற விவரங்களை, பதிவெண்கள் வழங்குவதற்காக உடன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு 31.03.2021-க்குள் அனுப்பி வைத்து பல்கலைக்கழகத்திலிருந்து பதிவெண்களைப் பெற்று 13.05.2021 – வியாழக்கிழமைக்குள் நடத்தி முடித்து செய்முறைத் தேர்வுகளுக்கான அக மற்றும் புற மதிப்பீட்டு மதிப்பெண்களை அகத் தேர்வாளர், புறத் தேர்வாளர், துறைத்தலைவர், முதல்வர் ஆகியோரது கையொப்பத்துடன் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**COVID-19** தொற்று காரணமாக, செய்முறைத் தேர்வுகள் நடத்தும் பொழுது மாணவர்களின் நலன் கருதி புறத் தேர்வாளர்களை பல்கலைக்கழக பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் **(Seniority List)** கல்லூரி முதல்வர் மற்றும் துறைத்தலைவர்கள் அருகில் உள்ள கல்லூரி/நிறுவனம்/மருத்துவமனை – யில் இருந்து அழைத்து செய்முறைத் தேர்வுகளை நல்ல முறையில் நடத்தி முடித்து அம்மதிப்பெண்களை பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கலாகிறது.

தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணாக்கர்களின் செய்முறைத் தேர்வின் அக மற்றும் புற மதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்களை உரிய தேதிக்குள் இணைய தளத்தின் (**www.bdu.ac.in / exam-esubmit)** வாயிலாகவும் மற்றும் அஞ்சல் வழியாவும் தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்முறைத் தேர்வுகள் நடைபெற இருக்கும் விவரங்களை தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை அனுப்பிவைத்து மாணாக்கர்களது தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

தேர்வு நெறியாளர்

நகல்

1.தேர்வு நெறியாளரின் நேர்முக உதவியாளர்

2.பல்கலைக்கழக மந்தனப்பிரிவு - **I**

3.பல்கலைக்கழக மந்தனப்பிரிவு - **II**

4.பல்கலைக்கழக கணினிப்பிரிவு